# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்

---

*(2005 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

*2005, ஏப்பிறல் மாதம் 01 ஆந் தேதிய* **இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின்** II *ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது*

*கொழும்பு 1, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக் கொள்ளலாம்*

**விலை: ரூபா 15.25** **தபாற் செலவு: ரூபா 7.50**

## 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம்

[2005 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 30 ஆம் திகதி அத்தாட்சிப் படுத்தப்பட்டது.]

ச.வ.ஓ. 57/2004

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

*சுருக்கப் பெயர்.*

**1.** இச்சட்டம் 2005 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 2 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் —

(அ) "விடயத்துக்கேற்ப" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இச்சட்டத்தின் 2அ என்னும் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக விடயத்துக்கேற்ப" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் :

(ஆ) அவ்வுட்பிரிவின் (ii) ஆம் உட்பந்தியில் —

(1) "2004 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2004 சனவரி 1ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கி —

(அ) மூன்றாம் அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்ட பண்டங்கள் தொடர்பில் 2004 நவெம்பர் 18ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடையும் ; அத்துடன்

(ஆ) மூன்றாம் அட்டவணை ஏற்புடையதாகாதுள்ள பண்டங்கள் தொடர்பில் 2004 திசெம்பர் 31ஆம் தேதியன்று அல்லது அதன் முன்னர் முடிவடையும்"

என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும் ;

2 –PL 000034– 1,250 (2005/02)

(2) "(இதன் வரிப்பின்னம் 2/23 ஆகும்)" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(இதன் வரிப்பின்னம் 2/23 ஆகும் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(இ) அப்பிரிவின் (ii) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புது உட்பந்திகளை உட்புகுத்துவதன் மூலமும் —

"(iii) 2004, நவெம்பர் 19 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கி 2004, திசெம்பர் 31 ஆம் தேதியன்று அல்லது அதன்முன்னர் முடிவடையும் காலப் பகுதிக்கும், அத்துடன் 2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப் படற்பாலதான ஏதேனும் காலப்பகுதிக்கும் சைபர் வீதப்படி வரிவிதிக்கப்படற்பாலதான அத்தகைய பண்டங்களைத் தவிர, மூன்றாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்படும் அத்தகைய வழங்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின் மீது ஐந்து சதவீதப்படி (அடிப்படை வரி வீதம்) (இதில் வரிப்பின்னம் 1/21 ஆகும்) ;

(iv) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிவதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்கு, சைபர் வீதப்படி வரிவிதிக்கப் படற்பாலதான அத்தகைய பண்டங்களைத் தவிர, நாலாம் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான அத்தகைய வழங்கப்பட்ட பண்டங்களினதும் சேவைகளினதும் அல்லது இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதியின் மீது பதினெட்டு சதவீதப்படி (ஆடம்பர வரிவீதம்) (இதில் வரிப்பின்னம் 9/59

ஆகும் ) ; அத்துடன்

(V) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்கும் ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப் பகுதிக்கு —

(அ) சைபர் வீதப்படி வரிவிதிக்கப்படற் பாலதான பண்டங்கள் மற்றும் சேவைகள் ; அத்துடன்

(ஆ) இச்சட்டத்தின் மூன்றாம் நாலாம் அட்டவணைகளில் குறித்துரைக் கப்பட்ட பண்டங்கள் மற்றும் சேவைகள்,

தொடர்பில் தவிர வழங்கப்பட்ட அல்லது இறக்குமதி செய்யப்பட்ட அத்தகைய பண்டங்களின் அல்லது சேவைகளின் பெறுமதியின்மீது பதினைந்து சதவீதப் படி (நியம வீதம்) (இதில் வரிப்பின்னம் 3/23 ஆகும்).

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் —

(அ) அவ்வுட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "தரக ருக்கு வழங்கப்பட்ட" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தரகரால் 2005, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர் வழங்கப்பட்ட" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(ஆ) அவ்வுட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியில், "தேவைப்படுத்தப்படுதலாகாது" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "தேவைப்படுத்தலா காது;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(இ) அவ்வுட்பிரின் (ஆ) என்னும் பந்தியை உடனடுத் துப் பின்வரும் புதிய பந்தியைச் சேர்ப்பதன் மூல மும் :

" (இ) (i) ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்

ஞூற்றாராம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச்சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன், ஒன்றில் புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட தைத்த ஆடை உற்பத்தியாளர்களால் அல்லது இலங்கை முதலீட் டுச் சபையுடன் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதி வியாபார இல்லங்கள் ஊடாக ஏற்றுமதிக்காகத் தைத்த ஆடை களை உற்பத்தி செய்யும் நோக்கத்திற்குப் பயன்படுத்தப்படுவதற்காக அத்தகைய வழங்குநர்களால் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் வழங்கலின் மீது ; அல்லது

(ii) 1978ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டத்தில் 17 ஆம் பிரிவின்கீழ் இலங்கை முதலீட்டுச்சபையுடன் பதிவு செய்யப்பட்ட ஏற்றுமதி வியாபார இல்லங்கள் ஊடாக ஏற்றுமதிசெய்யப்படவுள்ள, 1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையின் அங்கீகாரத்துடன் இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட தைத்து முடித்த ஆடைகளின் மீது வழங்கலின்மீது,

தைத்த ஆடைகள் உற்பத்தியாளர்களின் செயற்பாடுகள் புடவைப் பங்கீட்டுச் சபையினால் கண்காணிக்கப்படுகின்றதான அத்தகைய நேரம் வரையும், அத்துடன் வழங்கலின்மீது புடவை பங்கீட்டுச் சபை ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய பண்டங்களின் கையுதிர்ப்பின்மீது காலாண்டு அடிப்படையொன்றின் மீதான கணக்கிணைக்

*கத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவி, தைத்து முடித்த உற்பத்திப் பொருட்கள் வழங்கல்களின் பெறுநர்களால் உண்மையிலேயே ஏற்றுமதி செய்யப்பட்டன என ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் அத்தகைய நேரம் வரையும் ;*

*(ஈ) 1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தால் தாபிக்கப்பட்ட ஏற்றுமதி அபிவிருத்திச் சபையுடன் ஏற்றுமதி யாளர்களாகப் பதிவுசெய்யப்பட்ட உற்பத்தியாளர் களால், இப்பிரிவின் (இ) என்னும் பந்தியில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களைத் தவிர, வேறுபண்டங்களின் உற்பத்தியின் நோக்கத் திற்குப் பயன்படுத்தப்படுவதற்கென ஏற்றுமதி அபிவிருத்திச் சபையின் அங்கீகாரத்துடன் இலங்கையில் உற்பத்திசெய்யப்பட்ட எவையேனும் பண்டங்களின் வழங்கல்களின் மீது, உற்பத்தி யாளர்களின் செயற்பாடுகள், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சின் அங்கீகாரத்துடன் ஏற்றுமதி அபிவிருத்திச் சபையால் கண்காணிக்கப்பட்டு, ஆணையாளர் தலைமையதிபதியால் குறித்துரைக் கப்பட்டவாறான காலாண்டு அடிப்படையொன் றில் அத்தகைய பண்டங்களின் கையுதிர்ப்பின் மீதான கணக்கிணக்கத்தை ஆணையாளர் தலைமையதிபதிக்குக் கொடுத்துதவி, தைத்து முடித்த பண்டங்கள் வழங்கல்கள் பெறுநர்களால் உண்மையிலேயே ஏற்றுமதி செய்யப்பட்டன என ஆணையாளர் தலைமையதிபதி திருப்தியுறும் வரை "*

*(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவில் –*

*(அ) அதன் (உ) என்னும் பந்தியில் ஏதேனும் "கப்பல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஏதேனும்*

கப்பல்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ஆ) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலமும் ;

"(ஊ) 1996 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட எவரேனும் ஆளினால் ஏற்றுமதிக்கான தைத்த ஆடைகளின் உற்பத்தியின் நோக்கத்திற்காக புடவைப் பங்கீட்டுச் சபையின் அங்கீகாரத்துடனும் விடயத்துக்கேற்ப சுங்கத் தலைமையதிபதியினதும் அல்லது முதலீட்டுச் சபையின் தலைமையதிபதியின் மேற்பார்வையின் கீழும் இறக்குமதி செய்யப்பட்ட ஏதேனும் புடவை அல்லது துணையுறுப்புகள்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் 2அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**3.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 2 ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன் அது அச்சட்டத்தின் 2அ என்னும் பிரிவு என்றாற் போன்று பயனுறுதலும் வேண்டும் :—

"அமைச்சர் கட்டளை மூலம் வீதங்களை வேறு படுத்தலாம்.

2அ. (1) அமைச்சர், கட்டளைமூலம் 2 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களை முன்னர் குறித்துரைக்கப்பட்ட வரிவீதங்களை அதிகரிப்பதன் மூலம் அல்லது குறைப்பதன் மூலம் மேற்கூறப்பட்ட பிரிவில் குறித்துரைக்கப்பட்ட சேர்பெறுமதி வரி விதிப்பனவுக்கு அது தொடர்புறுத்தும் அளவுக்கு வேறுபடுத்தலாம்.

(2) அமைச்சரினால் (1) ஆம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்பட்ட கட்டளை அதன்மீது அவரது கையொப்பம் இடப்படுவதன்மீது உடனடியாக நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) ஒவ்வொரு கட்டளையும் வசதியானளவு

விரைவில் கசெற்றில் வெளியிடப்படல் வேண்டும்.

(4) அத்தகைய கட்டளை அதன் பின்னர் வசதியானளவு விரைவில் பாராளுமன்ற தீர்மானம் ஒன்றின் மூலம் அங்கீகரிக்கப்படல் வேண்டும்.

(5) அத்தகைய கட்டளை பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாதவிடத்து அத்தகைய தீர்மானத் தேதியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு அப்பிரிவின் (ஈ) என்னும் பந்தியில், "2002, ஓகத்து 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2002, ஓகத்து 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் 2005, சனவரி 1 ஆந் தேதிக்கு முன்னர்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 6 ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்.

**5.** முதன்மைச் சட்டத்தின் 6 ஆம் பிரிவு இத்தால் நீக்கம் செய்யப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது :—

"இறக்குமதி செய்யப்பட்ட பண்டங்களின் பெறுமதி.

6. இறக்குமதி செய்யயப்பட்ட பண்டங்களின் பெறுமதியானது —

(அ) சுங்கத் தீர்வையின் நோக்கத்திற்குத் தீர்மானிக்கப்பட்ட பெறுமதியின் ஐந்து சதவீதத்தால் அதிகரிக்கப்பட்ட தொகையின்; அத்துடன்

(ஆ) அத்தகைய பண்டங்கள்மீது 2002 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் மிகைவரி, வரி, துறைமுக மற்றும் விமானநிலைய அபிவிருத்தி விதிப்பனவு மற்றும் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கிழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் உற்பத்தித் தீர்வை என்பன சேர்க்கப்பட்டு அத்தகைய பண்டங்கள் தொடர்பில் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் சுங்கத் தீர்வையின் தொகை

என்பவற்றின் கூட்டு மொத்தம் ஆதல் வேண் டும்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 7 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (ஆ) என்னும் பந்தியின் (vi) ஆம் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :—

“ (vii) ஆயிரத்துத் தொளாயிரத்து தொண்ணூற்றாறாம் ஆண்டின் 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையின் மேற்பார்வையின்கீழ், கைத்தொழில் அமைச்சுடன் பதிவு செய்யப்பட்ட தைத்த ஆடைக் கொள்வனவு அலுவலகமொன்றினால் கடல் கடந்த கொள்வனவுகாரர்களுக்கு வழங்கப்பட்ட எந்தச் சேவைகளுக்கான கொடுப்பனவு, அத்தகைய சேவைகள் தைத்த ஆடைகளின் ஏற்றுமதிக்கு வசதியளிப்பதற்கு அத்தியாவசியமான சேவைகளாக ஆணையாளர் தலைமையதிபதியால் இனங்காணப்பட்ட அளவுக்கு வங்கியொன்றின் ஊடாக அந்நிய நாணயத்தில் பெறப்படுகின்றனவோ அந்தச் சேவைகள்.”.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**7**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 20 ஆம் பிரிவு அப்பிரிவின் (6)ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:—

(1) அவ்வுட்பிரிவுக்கு அவ்வுட்பிரிவின் பந்தி (அ) என மீளவிலக்கமிடுவதன் மூலமும் ;

(2) “கருதப்படுதல் வேண்டும்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, “கருதப்படுதல் வேண்டும். இப்பந்தியின் கீழ் வழங்கப்பட்ட பணப்பட்டியல் இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக வரிப்பணப்பட்டியலாகக் கருதப்படுதலாகாது” என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) அவ்வுட்பிரிவின் மீளவிலக்கமிடப்பட்ட 6 (அ) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய உட்பந்தியைச் சேர்ப்பதன் மூலமும் :—

“(ஆ) இரண்டாம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், சேர்பெறுமதி வரி சேகரிக்கப்படா

விட்டாலும், 2ஆம் பிரிவின் (2)ஆம் உட்பிரிவின் பந்தி (அ) அல்லது (இ) என்பதன்கீழ் செய்யப் பட்ட வழங்கல்கள் மீது வரிப்பணப்பட்டிய லொன்று, "நிறுத்திவைக்கப்பட்ட சேர்பெறுமதி வரி" என்று காட்டப்படும் சேர்பெறுமதி உறுப்பொன்றுடன் சேர்த்து, பதிவு செய்யப்பட்ட ஒவ்வோர் ஆளினாலும் வழங்கப்படுதல் வேண் டும். இப்பந்தியின்கீழ் வழங்கப்படும் பணப் பட்டியலொன்று இச்சட்டத்தின் நோக்கங்களுக்கு வரிப்பணப் பட்டியலென்றாகக் கருதப்படுதலா காது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**8**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவு அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவில், "முடிவுற்ற பின்னர்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஒவ்வொரு வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதியும் முடிவுற்ற பின்னர் மாதத்தின் இருபதாம் நாளுக்குப் பிந்தாமல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படு கின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**9**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவு அப்பிரிவின் (3)ஆம் உட்பிரிவில் அப்பிரிவிற்கான இரண்டாம் காப்புவாசகத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :

"ஆயினும் மேலும், வெளியீட்டு வரிக்கு ஐந்து சதவீதப்படி கணக்கீடு செய்யும் ஆளெவரும் உற்பத்திக்கான போக்குவரத்து மற்றும் இயந்திரத் தொகுதியின் நோக்கங்களுக்காகப் பயன் படுத்தப்படும் மோட்டார் வாகனமொன்றின் விடயத்தில் தவிர, அத்தகைய வழங்கல் தொடர்பில் ஏதேனும் உள்ளீட்டு வரியைக் கழிப்பனவு செய்வதற்கு உரித்துடையவராதலாகாது :

ஆயின், மேலும் எவரேனும் ஆளினால் இச்சட்டத்தின்கீழ் அனுமதிக்கப்படற்பாலதான பதினெட்டுச் சதவீதப்படி செலுத்தப் பட்ட உள்ளீட்டு வரி எதுவும் பதினைந்து சதவீதத்திற்கு மட்டுப் படுத்தப்படுதல் வேண்டும்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்.

**10**. முதன்மைச் சட்டவாக்கத்தின் பிரிவு 25இ அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவில் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) அவ்வுட்பிரிவின் (எ) என்னும் பந்தியின் (ii) ஆம்

உட்பிரிவின் "2004 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "2004 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்குவதும் 2005 சனவரி 1 ஆம் தேதிக்கு முன்னர் முடிவடைவதுமான" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) அதன் (எ) எனும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் புதிய பந்தியை உட்புகுத்துவதன் மூலமும் :—

" (எஎ) 2005, சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் தொடங்கும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கு எவரேனும் ஆளினால் சொந்தமாக கொண்டிருக்கப்படும் கம்பெனிப் பங்குகளின் விற்பனையிலிருந்து அத்தகைய ஆளுக்கு அல்லது வேறு ஆட்களினால் அத்தகைய பங்குகளின் கொள்வனவிலும் விற்பனையிலும் துணையாயிருந்த வேறு எவரேனும் ஆளுக்கு எழுகின்ற, (இவ்வத்தியாயத்தின் கருத்தெல்லைக்குள் ஏதேனும் "குறித்துரைக்கப்பட்ட நிறுவனத்திற்கு" அல்லது இலங்கை மத்திய வங்கியுடன் பதிவு செய்யப்படாத, ஆனால் நிதிக் கம்பெனியொன்றினால் வழங்கப்படும் அத்தகைய சேவைகளையொத்த சேவைகளை வழங்குகின்ற ஆளொருவருக்கு எழுகின்ற அத்தகைய இலாபங்களையும் வருமானத்தையும் தவிர) இலாபங்கள் அல்லது வருமானம்.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**11.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில், "மாதத்தின் பதினைந்தாம் நாளுக்குப்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "மாதத்தின் இருபதாம் நாளுக்குப்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவைத் திருத்துதல்.

**12.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவு அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அதன் இரண்டாவது காப்புவாசகத்தில், "உள்ளீட்டு வரியாக அனுமதிக்கப்படுதலாகாது." என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உள்ளீட்டு வரியாக அனுமதிக்கப்படுதலாகாது ;

ஆயின் மேலும் கொள்ளப்பட்ட எவையேனும் பண்டங்கள் அல்லது சேவைகள் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கலொன்றைச் செய்வதில் பயன்படுத்தப்பட்டுள்ளவிடத்தும், ஏதேனும் உள்ளீட்டு வரி கோரப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளவிடத்தும், அப்போது 22 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய விரிவிக்கப்படற்பாலதான வழங்கல் எவ்வரிவிதிக்கப் படற்பாலதான காலப்பகுதியில் விலக்களிக்கப்பட்ட வழங்கலாக (முச்சக்கர வண்டிகளுக்குக் குத்தகை கொடுத்தல் வசதிகளை வழங்கும் விடயத்திற்றவிர) பின்னர் வருகின்றதோ அக்காலப் பகுதியினுள், விலக்களிக்கப்பட்ட வழங்கலுக்கு ஏற்றிக் கூறப்படற் பாலதான அத்தகைய பாகம் அனுமதிக்கப்படுதலாகாது." என்னும் சொற்களை இடுவதன் மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

**13.** முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணை அதன் பாகம் II இல் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :—

(1) பாகம் II (அ) வின் 1 ஆம் விடயத்தில், "உடன் தேங்காய், கீரை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "உடன் தேங்காய், கீரை உள்ளடங்கலாக தேயிலை," என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(2) பாகம் II (அ) என்பதன் (iv) ஆம் விடயத்தில் "வானூர்திகள், உலங்குவானூர்திகள், முத்துக்கள், வைரங்கள், கருங்கற்கள் அல்லது மருவிய கருங்கற்கள், வைரத்தூள், அரும் உலோகங்கள், அரும் உலோகங்கள் தோய்ந்த உலோகங்கள், தங்க நாணயங்கள் மற்றும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வானூர்திகள் மற்றும்" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(3) பாகம் II (அ) என்பதன் (X) ஆம் விடயத்தில், "(01.07.2004 இலிருந்து பயனுறும்). " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(01.07.2004 இலிருந்து பயனுறும்) ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(4) பாகம் II (அ) என்பதன் விடயம் (X) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலமும் :

" (xi) கமத்தொழில் விதைகள், கமத்தொழில் செடிகள்,

இறால் தீன் உட்பட கூனிறால் தீன் மற்றும் கோழித்தீன் தவிர்ந்த விலங்குத் தீன் ;"

(5) பாகம் II (ஆ) என்பதன் விடயம் (ii) இல் "போக்கு வரத்துச் சேவைகள் ; " என்னும் சொற்களுக்குப் பதிலாக, "போக்குவரத்துச் சேவைகள் அத்துடன் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று அல்லது அதன் பின்னர் முச்சக்கர வண்டிகளுக்கு குத்தகை வசதியின்மீது செலுத்தப்படற்பாலதான ஏதேனும் குத்தகை வாடகையின்மீது முச்சக்கர வண்டிகளுக்கு குத்தகை வசதிகள் ;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(6) பாகம் II (ஆ) என்பதன் விடயம் (iii) இல் "விஞ்சாத மின்சாரம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "விஞ்சாத மின்சாரம், அத்துடன் நீர் மின்வலு அல்லது அனல்மின்வலு ஊடாக சக்தி வழங்கலைத் தவிர வேறு மாற்று மின்வலு கருத்திட்டம் ஊடாக மின்சாரம்;" என்னும் சொற்களை இடுவதன் மூலமும் ;

(7) பாகம் II (இ) என்பதன் விடயம் (viii) என்பதனை உடனடுத்துப் பின்வரும் புதிய விடயங்களைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(ix) திறைசேரிச் செயலாளரால் வெளியிடப்பட்ட எதிர்மறை நிரலிலுள்ள பண்டங்களைத் தவிர ஆணையாளர் தலைமையதிபதியால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் கருத்திட்டத்திற்கு, கருத்திட்டம் சார்ந்த மூலதனப் பொருளாகப் பயன்படுத்தப்படவுள்ள ஏதேனும் கருத்திட்டத்திற்காக கருத்திட்டம் தொடங்கியதிலிருந்து மூன்று ஆண்டுகளை விஞ்சாதிருக்கவேண்டிய கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதியின்போது வழங்கப்படும் நூறு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத பெறுமதியுடைய பண்டங்கள், ஆயினும், அத்தகைய கருத்திட்டம் பூர்த்தியடைவதன்மீது வரிவிதிக்கப்படற்பாலதான வழங்கல்களைச் செய்தல் வேண்டும் (1.1.2005லிருந்து பயனுறும்);

(x) 1996 ஆம் ஆண்டு 33 ஆம் இலக்க, புடவைப் பங்கீட்டுச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட புடவைப் பங்கீட்டுச் சபையுடன் பதிவுசெய்யப்பட்ட இலங்கையிலுள்ள தைத்த ஆடைக் கொள்வனவு அலுவலகத்தால் வியாபார நோக்கங்களுக்கான

தைத்த ஆடைகளின் மாதிரிகள், அத்தகைய பொருள் விற்பனை செய்யப்படாதவரை.".

(8) பாகம் II (ஈ) என்பதனை உடனடுத்துப் பின்வருவ தனைச் சேர்ப்பதன்மூலமும் :-

"(உ) தீர்வையற்ற கடைகளுக்கு வெளிநாட்டு நாணயத்தில் கொடுப்பனவுக்கென உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்களின் வழங்கல்.".

முதன்மைச் சட்டவாக்கத்தில் புதிய மூன்றாவது அட்டவணை யொன்றையும் நாலாவது அட்டவணை யொன்றையும் உட்புகுத்துதல்.

**14.** முதன்மைச் சட்டவாக்கத்தின் இரண்டாம் அட்டவணையை உடனடுத்துப் பின்வரும் புதிய அட்டவணைகள் இத்தால் உட்புகுத்தப்படுகின்றன என்பதுடன் அவை முதன்மைச் சட்டவாக்கத்தின் மூன்றாம் நாலாம் அட்டவணைகளாகப் பயனுறுதலும் வேண்டும்.

### "மூன்றாம் அட்டவணை

(பிரிவு 2)

(1) பின்வருவனவற்றில் வழங்கல் அல்லது இறக்குமதி

(i) சீனி
(ii) பருப்பு
(iii) உருளைக்கிழங்கு
(iv) வெங்காயம்
(v) கருவாடு
(vi) குழந்தைப் பால்மா தவிர்ந்த ஏனைய பால்மா
(vii) மிளகாய்

(2) இவ்வட்டவணையின் (i) ஆம் (ii) ஆம் விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட பண்டங்களின் இறக்குமதி அல்லது வழங்கல் 2004 ஒற்றோபர் 1 ஆம் தேதி முதல் 2004 நவெம்பர் 18 ஆம் தேதி வரை எல்லா நோக்கங்களுக்காகவும் சேர்பெறுமதி வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளனவாகக் கருதப்படுதல் வேண்டும்.

### நாலாம் அட்டவணை

(பிரிவு 2)

ஆடம்பர வீதம்

(அ) பின்வருவனவற்றின் வழங்கல் அல்லது இறக்குமதி

(i) வளிச்சீராக்கிப் பொறிகள்

(ii) குளிர்சாதனப் பெட்டிகள்

(iii) பீங்கான் வகைகள் கழுவும் பொறிகள்

(iv) சலவை இயந்திரங்கள்

(v) காற்றுறிஞ்சும் தூ சியகற்றும் கருவி/தரை மினுக்கிகள்

(vi) சமையலறைக் கழிவகற்றிகள்

(vii) உணவு அரைக்கும் கருவி மற்றும் கலவை இயந்திரங்கள்

(viii) அனல் அடுப்புகள் மற்றும் அடுப்புகள்

(ix) தலைமுடி உலர்த்திகள்/சிகையலங்கார உபகரணம்

(x) வீடியோ கருவி (வீசீடீ, டீவீடீ)

(xi) புகைப்படக் கருவிகள்

(xii) வானொலிப் பெட்டி, கசெட், இசைத்தொகுதி

(xiii) தொலைக்காட்சிப் பெட்டிகள்

(xiv) மோட்டார் சைக்கிள்கள், சைக்கிள்கள், முச்சக்கர வண்டிகள், பிரயாணி போக்குவரத்து வசு வண்டிகள், லொறிகள், ட்ரக் வண்டிகள் மற்றும் பண்டங்களின் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படும் வேறு எவை யேனும் வாகனங்கள் என்பன தவிர்ந்த மோட்டார் வாகனங்கள்

(xv) கடிகாரங்கள்/மணிக்கூடுகள்

(xvi) இசைக் கருவிகள்

(xvii) விளையாட்டு உபகரணங்கள் (கசினோ முதலியன)

(xviii) ஆபரணங்கள்

(xix) காற்றடைத்த தண்ணீர்

(xx) மதுபானம்

(ஆ) உயர்தொழில் கருத்தரங்குகளுக்கும் அவற்றையொத்த செயற்பாடுகளுக்கும் மண்டபங்களை வாடகைக்கு விடுதலைத் தவிர, மண்டபங்களை வாடகைக்கு விடுதல் திருமண வரவேற்புபசாரங்களுக்கும் அவற்றையொத்த வேறு வரவேற்புப சாரங்களுக்கும் ஏற்பாடு செய்யப்படக் கூடியவாறான வேறு சேவைகள் உட்பட ஹோட்டல் களாலும் விருந்தினர் விடுதிகளாலும் சிற்றுண்டிச்சாலை களாலும் வழங்கப்படும் சேவைகள்.".

கடந்த காலத்தை உள்ளடக்கும் பயன்.

**15.** முதன்மைச் சட்டவாக்கத்தின் —

(அ) பிரிவு 2(3) (ஊ) என்பதற்கு இச்சட்டத்தின் 2 ஆம்

பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக் காகவும் 2005, சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ள தாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ஆ) பிரிவு 6 என்பதற்கு இச்சட்டத்தின் 5 ஆம் பிரிவால் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ள தாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(இ) இச்சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 21 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம், 2005 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப் படுதல் வேண்டும் ;

(ஈ) முதன்மைச் சட்டவாக்கத்தின் 22 ஆம் பிரிவுக்கு —

(i) இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கான முதலாவது காப்பு வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2004 நவெம்பர் 18 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் ;

(ii) இச்சட்டத்தின் 9 ஆம் பிரிவுக்கான இரண்டாம் காப்பு வாசகத்தினாற் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படு தல் வேண்டும் ;

(உ) இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 26 ஆம் பிரிவுக்குச் செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படு தல் வேண்டும் ;

(ஊ) இச்சட்டத்தின் 11 ஆம் பிரிவினால் முதன்மைச் சட்டவாக்கத்தின் 76 ஆம் பிரிவுக்கான மூன்றாவது காப்புவாசகத்துக்கு செய்யப்பட்ட திருத்தம் எல்லா நோக்கங்களுக்காகவும் 2005 சனவரி 1 ஆம் தேதியன்று

வலுவுக்கு வந்துள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.

*2004 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, சட்டத்தின் 22 ஆம் பிரிவுக்கான திருத்தம்.*

**16.** இரண்டாயிரத்து நாலாம் ஆண்டின் 13 ஆம் இலக்க சட்டத்தின் 22 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் விடயத்தின் (V) ஆம் பந்தியில் "ஒற்றோபர் 17, 2003" என்னும் சொல்லுக்கும் இலக்கங்களுக்கும் பதிலாக "செத்தெம்பர் 17, 2003" என்னும் சொல்லையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

*நட்டோத்தர வாதம்.*

**17.** இச்சட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டவாறு 2004, நவெம்பர் 19 ஆந் தேதியன்று தொடங்கி 2004 திசெம்பர் 31 ஆந் தேதியன்று முடிவடைகின்ற காலப்பகுதியின் போது 2005, சனவரி 1 ஆம் தேதியன்று தொடக்கம் இச்சட்டம் தொடங்கும் தேதிவரையிலான காலப்பகுதியின்போதும் சேர்பெறுமதி வரியைச் சேகரிக்கின்ற ஆளெவரும், முறையான அதிகாரத்துடன் செயற்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன், அத்தகைய சேகரிப்பு எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியாகும் விதத்தில் செய்யப்பட்டுள்ளதாகவும் இருப்பதாகவும் கருதப்படுதலும் வேண்டும், அத்துடன் அத்தகைய சேகரிப்புத் தொடர்பில் எல்லாக் குடியியல் அல்லது குற்றவியல் வழக்குகளுக்கெதிராக இத்தால் நட்டோத்தர வாதம் செய்யவும்படுகின்றார்.

*ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.*

**18.** இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும், தமிழ் உரைக்குமிடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 ; ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், இல. 32, திரான்ஸ்வேர்க்ஸ் இல்லம், லோட்டஸ் றோட், கொழும்பு 01 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்